# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

HIGHER SECONDARY SECOND YEAR

## Unit 6 / கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு

## கணக்குப்பதிவியல்

### சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. கூட்டாளி ஒருவர் ஜுன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது
(அ) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும்
(ஆ) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும்
(இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்
(ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்

2. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.
(அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம்
(ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
(இ) ஆதாய விகிதம் (ஈ) தியாக விகிதம்

3. கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்புமாற்றப்படுவது
(அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
(ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு
(இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
(ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

4. மறுமதிப்பீட்டின்போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
(அ) ஆதாயம் (ஆ) நட்டம்
(இ) இலாபம் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

5. ஒரு கூட்டாளி விலகலின்போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?
(அ) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு
(ஆ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு
(இ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு
(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு
(அ) வங்கி க/கு (ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
(இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு
(ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

7. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த 'A' என்பவர் 2019, மார்ச் 31 அன்று இறந்து விட்டார். அவருக்கு செலுத்த வேண்டிய இறுதித்தொகை ` 25,000 உடனடியாகச் செலுத்தப்படவில்லை. அது மாற்றப்பட வேண்டிய கணக்கு
(அ) A-ன் முதல் கணக்கு (ஆ) A-ன் கடன் கணக்கு
(இ) A -ன் நிறைவேற்றாளர் கணக்கு
(ஈ) A -ன் நிறைவேற்றாளர்கடன் கணக்கு

8. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். B-ன் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் ` 30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B-க்கு ஈடு செய்வதற்கு A மற்றும் C யின் பங்களிப்பைக் கண்டறியவும்.
(அ) ரூ. 20,000 மற்றும் ரூ. 10,000
(ஆ) ரூ. 8,000 மற்றும் ரூ.4,000
(இ) ரூ. 10,000 மற்றும் ரூ. 20,000
(ஈ) ரூ. 15,000 மற்றும் ரூ.15,000

9. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
(அ) 4:3 (ஆ) 3:4 (இ) 2:1 (ஈ) 1:2

10. X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018 இல் இலாபம் ரூ. 36,000 என்ற அடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X ன் பங்கினைக் கண்டறியவும்.
(அ) ரூ. 1,000 (ஆ) ரூ. 3,000 (இ) ரூ. 12,000 (ஈ) ரூ. 36,000

### மிகக் குறுகிய வினாக்கள்

1. கூட்டாளி விலகல் என்றால் என்ன?
4. இறந்த கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றுவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

### குறுகிய வினாக்கள்

2. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
3. வெளிச்செல்லும் கூட்டாளிக்குச் செலுத்தவேண்டிய தொகையினை எவ்வாறு தீர்வு செய்யலாம்?

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important questions.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

(அ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் காப்புகளை மாற்றுதல்

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | இலாப நட்டப் பகிர்வு க/கு | ப | | xxx | |
| | பொதுக்காப்பு க/கு | ப | | xxx | |
| | காப்புநிதி க/கு | ப | | xxx | |
| | தொழிலாளர் ஈட்டு நிதி க/கு | ப | | xxx | |
| | முதலீட்டு மாறுபடும் நிதி க/கு | ப | | xxx | |
| | பழைய கூட்டாளிகளின் முதல்/ நடப்பு க/கு (பழைய இலாபவிகிதத்தில்) | | | | xxx |

(ஆ) பகிர்ந்து தரா நட்டத்தை மாற்றுதல்

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | பழைய கூட்டாளிகளின் முதல்/ நடப்பு க/கு | ப | | xxx | |
| | இலாப நட்ட க/கு (பழைய இலாபவிகிதத்தில்) | | | | xxx |

### எடுத்துக்காட்டு 2:

மேரி, மீனா மற்றும் மரியம் எனும் கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் இலாபநட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1–1–2019 அன்று மேரி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளில், அந்நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு சொத்துகள் பக்கத்தில் ₹ 75,000 பகிர்ந்து தரா நட்டம் எனக் காட்டியது. பகிர்ந்து தரா நட்டத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

### 6.4 சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்தல்

கூட்டாண்மையிலிருந்து ஒரு கூட்டாளி விலகும் போது, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நடப்பு மதிப்பு, ஏட்டு மதிப்பிலிருந்து மாறுபடலாம். எனவே, அவை மறுமதிப்பீடு செய்யப்படுகின்றன. சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்வது கணக்குகளில் இரண்டு முறைகளில் கையாளப்படுகின்றன.

(அ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டப்பெறுவது

(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டாமல் இருப்பது.

சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்யும் போது பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | 1. சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போது | | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு | ப | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | | xxx |
| | 2. சொத்துகளின் மதிப்பு குறையும் போது | | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு | ப | | xxx | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு | | | | xxx |
| | 3. பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போது | | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு | ப | | xxx | |
| | குறிப்பிட்ட பொறுப்பு க/கு | | | | xxx |
| | 4. பொறுப்புகளின் மதிப்பு குறையும் போது | | | | |
| | குறிப்பிட்ட பொறுப்பு க/கு | ப | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | | xxx |
| | 5. ஏடுகளில் பதிவு செய்யாத சொத்துகளை பதிவு செய்யும் போது | | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு | ப | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | | xxx |
| | 6. ஏடுகளில் பதிவு செய்யாத பொறுப்புகளை பதிவு செய்யும் போது | | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு | ப | | xxx | |
| | குறிப்பிட்ட பொறுப்பு க/கு | | | | xxx |
| | 7. மறுமதிப்பீட்டு கணக்கின் இருப்பினை மாற்ற | | | | |
| | (அ) மறுமதிப்பீட்டு இலாபமாக இருந்தால் | | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு | ப | | xxx | |
| | அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கு (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக) | | | | xxx |
| | (அ) மறுமதிப்பீட்டு நட்டமாக இருந்தால் | | | | |
| | அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கு (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக) | ப | | xxx | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | | xxx |

மறுமதிப்பீட்டுக் கணக்கின் படிவம் பின்வருமாறு:

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர குறைவு) | xxx | குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர அதிகரிப்பு) | xxx |
| குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர அதிகரிப்பு) | xxx | குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர குறைவு) | xxx |
| அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கு (மறுமதிப்பீட்டு இலாபம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) * | xxx | அனைத்து கூட்டாளிகளின் முதல் க/கு (மறுமதிப்பீட்டு நட்டம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) * | xxx |
| | xxx | | xxx |

* இது மறுமதிப்பீட்டு இலாபமாகவோ அல்லது நட்டமாகவோ இருக்கலாம்.

### எடுத்துக்காட்டு 4

ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) வளாகத்தின் மதிப்பை ₹ 40,000 உயர்த்த வேண்டும்

(ii) சரக்கிருப்பு ₹ 3,000, இயந்திரம் ₹ 6,500 மதிப்பு குறைக்க வேண்டும்.

(iii) கொடுபடாச் செலவுகள் ₹ 500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

### எடுத்துக்காட்டு 6

ஜான், ஜேம்ஸ் மற்றும் இராஜா என்ற கூட்டாளிகள் முறையே சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | அலவலக சாதனங்கள் | | 70,000 |
| ஜான் | 80,000 | | இயந்திரம் | | 1,40,000 |
| ஜேம்ஸ் | 60,000 | | பற்பல கடனாளிகள் | 52,000 | |
| இராஜா | 1,00,000 | 2,40,000 | கழிக்க: வாரா | | |
| பற்பல கடனீந்தோர் | | 1,20,000 | ஐயக்கடன் ஒதுக்கு | 2,000 | 50,000 |
| | | | சரக்கிருப்பு | | 60,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 40,000 |
| | | 3,60,000 | | | 3,60,000 |

2019, மார்ச் 31 ஆம் நாளன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

i) இயந்திரம் ₹1,30,000 ஆக மதிப்பிடுவது

ii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹ 2,000 குறைப்பது

iii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 3,000 ஆக உயர்த்துவது

iv) ஏடுகளில் பதிவு பெறாமல் உள்ள முதலீடுகள் ₹ 25,000 பதிவு செய்ய வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

### எடுத்துக்காட்டு 8

ஆர்யா, பெனின் மற்றும் சார்லஸ் என்ற கூட்டாளிகள் முறையே 3:3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களில் சார்லஸ் என்பவர் விலகினார். அவருடைய பங்கு முழுவதையும் ஆர்யா எடுத்துக் கொண்டார். ஆர்யா மற்றும் பெனின் ஆகியோரின் புதிய இலாப விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

### எடுத்துக்காட்டு 10

குமார், கேசவன் மற்றும் மனோகர் எனும் கூட்டாளிகள் முறையே $\frac{1}{2}$, $\frac{1}{3}$ மற்றும் $\frac{1}{6}$ எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். மனோகர் விலகினார். அவருடைய பங்கினை குமார் மற்றும் கேசவன் இருவரும் சமமாக எடுத்துக் கொண்டனர். புதிய இலாப விகிதத்தையும் மற்றும் ஆதாய விகிதத்தையும் கணக்கிடவும்.

### 6.6.1 ஏடுகளில் ஏற்கனவே இருக்கும் நற்பெயர்

கூட்டாளி விலகும் நாளில், ஏற்கனவே இருப்புநிலைக் குறிப்பில் தோன்றும் நற்பெயரை, கூட்டாளிகள் போக்கெழுத முடிவெடுத்தால், அதனை கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு / நடப்புக் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றி போக்கெழுதலாம். அதற்கான குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு:

குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (பழைய விகிதத்தில்) | ப | | xxx | |
| | நற்பெயர் க/கு | | | | xxx |
| | (ஏற்கனவே இருக்கும் நற்பெயர் போக்கெழுதப்பட்டது) | | | | |

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

எடுத்துக்காட்டு 13

நரேஷ், மணி மற்றும் முத்து ஆகிய கூட்டாளிகள் 2:2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2019 மார்ச் 31ஆம் நாள் நிறுவனத்திலிருந்து முத்து விலகினார். முத்து விலகிய நாளன்று, ஏடுகளில் நற்பெயர் ₹ 40,000 எனக் காட்டியது. அவர்கள் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

அ) நற்பெயர் முழுவதையும் போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்
ஆ) நற்பெயரில் பாதித்தொகையை போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

**இலாபநட்ட அனாமத்து கணக்கு ஒரு தற்காலிக கணக்கு ஆகும்.** விலகிய அல்லது பாதிக்கப்பட்ட கூட்டாளியின் நடப்பு ஆண்டு இலாபம் அல்லது நட்டத்தை அவர் விலகும் தேதி வரை அல்லது இறந்த தேதிவரை பகிர்ந்தளிப்பதற்காகத் தயாரிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு 14

ஜஸ்டினா, நவி மற்றும் ரித்திகா எனும் கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 31.3.2019 அன்று ரித்திகா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். முந்தைய ஆண்டுகளின் இலாபம் பின்வருமாறு.

2016: ₹ 5,000; 2017: ₹ 10,000; 2018: ₹ 30,000; 2019 ஆம் ஆண்டிற்கான ரித்திகாவின் இலாபப் பங்கை அவர் விலகும் நாள் வரை பின்வரும் நிலைகளில் கணக்கிடவும்.

(அ) முந்தைய ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.
(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

மேலும், கூட்டாளிகளின் முதல் கணக்கு மாறுபடும் முதல் முறை எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அ) கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகையை உடனடியாக ரொக்கமாகச் செலுத்தினால்

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | விலகும் கூட்டாளி முதல் க/கு | ப | | xxx | |
| | ரொக்கம் / வங்கி க/கு | | | | xxx |

(ஆ) கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகையை உடனடியாக ரொக்கமாக செலுத்தவில்லை என்றால்

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | விலகும் கூட்டாளி முதல் க/கு | ப | | xxx | |
| | விலகும் கூட்டாளி கடன் க/கு | | | | xxx |

(இ) கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகையை பாதி ரொக்கமாகவும் பாதி கடனாகவும் செலுத்தினால்

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | விலகும் கூட்டாளி முதல் க/கு | ப | | xxx | |
| | ரொக்கம் / வங்கி க/கு (செலுத்திய ரொக்கம்) | | | | xxx |
| | விலகும் கூட்டாளியின் கடன் க/கு | | | | xxx |

கூட்டாளி விலகலின்போது அவருக்கு சேர வேண்டிய தொகையினை முழுவதுமாக செலுத்தவில்லை என்றால் கூட்டாளி விலகலுக்குப்பின் தயாரிக்கப்படும் இருப்பு நிலைக் குறிப்பில் விலகும் கூட்டாளியின் கடன் கணக்கு, பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும்.

எடுத்துக்காட்டு 17

சார்லஸ், முத்து மற்றும் சேகர் என்ற கூட்டாளிகள் முறையே 3:4:2 என்ற விகிதத்தில் இலாபங்களைப் பகிர்ந்து கொண்டனர். 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | அறைகலன் | 20,000 |
| சார்லஸ் | 30,000 | | சரக்கிருப்பு | 40,000 |
| முத்து | 40,000 | | கடனாளிகள் | 30,000 |
| சேகர் | 20,000 | 90,000 | வங்கி ரொக்கம் | 42,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 27,000 | இலாபநட்ட க/கு (நட்டம்) | 18,000 |
| பற்பல கடனீந்தோர் | | 33,000 | | |
| | | 1,50,000 | | 1,50,000 |

1.1.2019 அன்று பின்வரும் ஏற்பாடுகளின்படி சார்லஸ் கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

(i) சரக்கிருப்பின் மதிப்பு 10% அதிகரிக்கப்பட வேண்டும்
(ii) அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்
(iii) வாராக்கடன் மீது ₹ 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்
(iv) கொடுபடா பழுதுபார்ப்புச் செலவு ₹ 11,000 இன்னமும் பதியப்படவில்லை
(v) சார்லஸிற்கு உரியத்தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, விலகலுக்குப் பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

(i) இறந்த கூட்டாளிக்குச் சேரவேண்டிய தொகையை அவரின் நிறைவேற்றாளர் அல்லது சட்டமுறை பிரதிநிதியிடம் மாற்றுவதற்கானப் பதிவு

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளியின் முதல் க/கு | ப | | xxx | |
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு | | | | xxx |

(ii) ரொக்கம் செலுத்தும் போது

(அ) சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தும் போது

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு | ப | | xxx | |
| | ரொக்கம் / வங்கி க/கு | | | | xxx |

(ஆ) சேரவேண்டியத் தொகை உடனடியாக ரொக்கமாக செலுத்தப்படாத போது

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு | ப | | xxx | |
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் கடன் க/கு | | | | xxx |

(இ) சேர வேண்டியத் தொகையின் ஒரு பகுதி மட்டும் உடனடியாகச் செலுத்தப்படும் போது

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு | ப | | xxx | |
| | ரொக்கக் க/கு / வங்கி க/கு (செலுத்திய தொகை) | | | | xxx |
| | இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் கடன் க/கு | | | | xxx |

எடுத்துக்காட்டு 22

இரமேஷ், இரவி மற்றும் ஆகாஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை தங்கள் முதல் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 31.12.2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

31.12.2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | பொறி மற்றும் இயந்திரம் | 45,000 |
| இரமேஷ் | 30,000 | | சரக்கிருப்பு | 22,000 |
| இரவி | 30,000 | | கடனாளிகள் | 15,000 |
| ஆகாஷ் | 20,000 | 80,000 | வங்கி ரொக்கம் | 10,000 |
| பொதுக்காப்பு | | 8,000 | கைரொக்கம் | 4,000 |
| கடனீந்தோர் | | 8,000 | | |
| | | 96,000 | | 96,000 |

31.3.2018 அன்று ஆகாஷ் இறந்து விட்டார். ஆகாஷின் இறப்பின்போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

(i) பொறி மற்றும் இயந்திரம் ₹ 54,000 என மதிப்பிடப்பட்டது.
(ii) சரக்கிருப்பின் மதிப்பில் ₹ 1,000 குறைக்கப்பட வேண்டும்.
(iii) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 24,000 என மதிப்பிடப்பட்டது.
(iv) கடந்த நிதியாண்டின் இறுதியில் இருந்து கூட்டாளி இறந்த நாள் வரை உள்ள இலாபத்தின் பங்கு, கூட்டாளியின் இறப்பிற்கு முன் உள்ள மூன்று முழு ஆண்டுகளின் சராசரி இலாப அடிப்படையிலானது.

2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான இலாபம் முறையே ₹ 66,000, ₹ 60,000 மற்றும் ₹ 66,000 ஆகும்.

ஆகாஷ் இறப்பிற்குப் பின் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

5. வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.
(i) நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பை ₹ 18,000 அதிகரிக்க வேண்டும்.
(ii) இயந்திரத்தின் மதிப்பை ₹ 15,000 குறைக்க வேண்டும்.
(iii) கொடுபட வேண்டியச் செலவுகளுக்கு ₹ 8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

9. ராமு, சோமு மற்றும் கோபு என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 3:5:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கோபு என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கை 3:1 எனும் விகிதத்தில் ராமுவும் சோமுவும் எடுத்துக் கொள்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

13. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பாலு, சந்துரு மற்றும் நிர்மல் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31 அன்று நிர்மல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். நிர்மல் விலகும் நாளன்று, நிறுமத்தின் ஏடுகளில் இருந்த நற்பெயரின் மதிப்பு ₹ 60,000. மாறுபடும் முதல் முறை எனக்கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை கீழ்கண்ட நிலைகளில் தரவும்.

(அ) ஏற்கனவே இருக்கின்ற நற்பெயர் முழுவதையும் போக்கெழுதுவதற்கு கூட்டாளிகள் தீர்மானித்தால்

(ஆ) ஏற்கனவே இருக்கின்ற நற்பெயரில் பாதியை போக்கெழுதுவதற்கு கூட்டாளிகள் தீர்மானித்தால்

22. விஜயன், சுதன் மற்றும் சுமன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை தங்கள் முதல் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களுடைய 31.12.2018 அன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

31.12.2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 80,000 |
| விஜயன் | 70,000 | | சரக்கிருப்பு | 45,000 |
| சுதன் | 50,000 | | கடனாளிகள் | 25,000 |
| சுமன் | 30,000 | 1,50,000 | வங்கி ரொக்கம் | 20,000 |
| பொதுக்காப்பு | | 18,000 | கைரொக்கம் | 15,000 |
| கடனீந்தோர் | | 17,000 | | |
| | | 1,85,000 | | 1,85,000 |

சுமன் 31.3.2019 அன்று இறந்து விட்டார். சுமனின் இறப்பின் போது, பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

(i) கட்டடம் ₹ 1,00,000 என மதிப்பிடப்பட வேண்டும்.

(ii) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000 குறைக்க வேண்டும்.

(iii) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 36,000 என மதிப்பிடப் பட்டது.

(iv) கடந்த நிதியாண்டின் இறுதியில் இருந்து கூட்டாளி இறந்த நாள் வரை உள்ள இலாபத்தின் பங்கு, கூட்டாளியின் இறப்பிற்கு முன் உள்ள மூன்று முழு ஆண்டுகளின் சராசரி இலாப அடிப்படையிலானது.

2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான இலாபங்கள் முறையே ₹ 40,000, ₹ 50,000 மற்றும் ₹ 30,000 ஆகும்.

சுமனின் இறப்பிற்குப் பின் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

மருதம் அகாடமி YouTube Channel 9659838789

www.Padasalai.Net